KAYALPATTINAM MUNICIPALITY

FORM 3

Minutes of the Meeting held on 03.03.2014

<table>
<tr><th>Date of Council Meeting</th><th>Decision Number</th><th>Subject of the Agenda</th><th>Resolution</th></tr>
<tr><td>05.03.2014</td><td>790</td><td>காயல்பட்டணம் நகராட்சிக்கு சொந்தமான நகராட்சியால் பராமரிக்கப்படும் உயர்கோபுர மின் விளக்குகளில் ஏற்பட்டுள்ள பழுதுகளை ஒவ்வொரு உயர்கோபுர மின்விளக்குகளையும் தனித்தனியாக ஆய்வு செய்து அதில் ஏற்பட்டுள்ள பழுதுகளையும் அதனை சரி செய்ய ஏற்படும் செலவினத் தொகையையும் குறிப்பிட்டு ஒவ்வொரு உயர்கோபுர மின் விளக்குகளுக்கும் தனித்தனியாக தகுதி வாய்ந்த நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளிகள் 28.02.2014 அன்று கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது
<table>
<tr><th>வ. எ ண்</th><th>பணியின் பெயர்</th><th>வேல்முருகன் ஏஜென்ஸி நாகர்கோவில்</th><th>கார்த்திக் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் நாகர்கோவில்</th><th>ஸ்ரீவிநாயகா எலக்ட்ரிக்கல்ஸ் நாகர்கோவில்</th><th>எம்.எம்.எலக்ட்ரிக் கல்ஸ் திருச்செந்தூர்</th></tr>
<tr><td>1</td><td>நகராட்சி புதிய பேருந்து நிலையம் அருகில்</td><td>129550</td><td>130250</td><td>130790</td><td>118600</td></tr>
<tr><td>2</td><td>தைக்காதெரு முகப்பு ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கி அருகில்</td><td>152150</td><td>153260</td><td>153980</td><td>68200</td></tr>
<tr><td>3</td><td>தாயிம்பள்ளி சந்திப்பு</td><td>156650</td><td>157740</td><td>158440</td><td>57400</td></tr>
<tr><td></td><td>கே.டி.எம்.தெரு கார்னர்(கஸ்டம்ஸ் சாலை முகப்பு)</td><td>98550</td><td>99250</td><td>99690</td><td>79360</td></tr>
<tr><td>4</td><td>கடற்கரையில் பெண்கள் அமரும் பகுதி</td><td>100900</td><td>101560</td><td>102100</td><td>132900</td></tr>
</table>
</td><td>எம்.எம்.எலக்ட்ரிக்கல்ஸ் கொடுத்துள்ள TIN NO. 33905901998 ரத்து செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு பணிக்கும் தனி தனியாக விலைப்புள்ளி குறிப்பிடப்படவில்லை. இதனால் எம்.எம்.எலெக்ட்ரிக்கல்ஸ் விலைப்புள்ளி ரத்து செய்யப்பட்டு அடுத்த குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வேல்முருகன் ஏஜென்ஸி நாகர்கோவில் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | 1. வேல்முருகன் ஏஜென்ஸி நாகர்கோவில், உயர்கோபுர மின் விளக்கு பழுது பார்த்தல் தனித்தனியாக விலைப்புள்ளி குறிப்பிடப்பட்டுள்ளது<br>2. கார்த்திக் டிஸ்ட்ரிபியுட்டர்ஸ் நாகர்கோவில் , உயர்கோபுர மின் விளக்கு பழுது பார்த்தல் தனித்தனியாக விலைப்புள்ளி குறிப்பிடப்பட்டுள்ளது<br>3. ஸ்ரீவிநாயகா எலக்ட்ரிக்கல்ஸ் நாகர்கோவில் , உயர்கோபுர மின் விளக்கு பழுது பார்த்தல் தனித்தனியாக விலைப்புள்ளி குறிப்பிடப்பட்டுள்ளது<br>4. எம்.எம்.எலக்ட்ரிக்கல்ஸ் திருச்செந்தூர் உயர்கோபுர மின் விளக்கு பழுது பார்த்தல் தனித்தனியாக விலைப்புள்ளி குறிப்பிடப்பட்டுள்ளது<br><br>குறிப்பு- 1. வரிசை எண் 1,2,3 மற்றும் 4 ஆகிய பணிகளுக்கு குறைவான விலைப்புள்ளி எம்.எம்.எலக்ட்ரிக்கல்ஸ் திருச்செந்தூர் கொடுக்கப்பட்டுள்ளது<br><br>2. வரிசை எண் 5 பணிக்கு வேல்முருகன் ஏஜென்ஸி நாகர்கோவில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்<br><br>அலுவலக குறிப்பு-மன்றம் பார்வையிட்டு முடிவு செய்யலாம் | |
| | 791 | காயல்பட்டணம் நகராட்சியில் 14 வது வார்டுக்குட்பட் கீழ லட்சுமிபுரம், தர்மராஜபுரம்,லட்சுமிபுரம் மற்றும் அரசு மாணவர் விடுதி ஆகிய இடங்களுக்கு நகராட்சியின் மூலம் விநியோகிக்கப்படும் குடிநீரானது சீராக கிடைக்காத காரணத்தினால் நகராட்சி புதிய பேருந்து நிலைய வாளகத்தில் உள்ள மேல் நிலை நீர்தேக்க தொட்டியிலிருந்து மேற்கண்ட இடங்களுக்கு 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட டிராக்டர் டேங்கர் வாகனம் மூலம் சப்ளை செய்ய ரூ.75000/-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்பந்துபுள்ளி கோரப்பட்டு திரு.ஜே.தங்கலிங்கம் கோமான்புதூர் என்பவருக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டதின் காரணமாக மீண்டும் அதே பணி செய்ய ரூ.75000/-க்கு நகர்மன்ற ஒப்பதல் பெறப்பட்டு 11.02.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்துபுள்ளிகள் வரப்பெற்றது | நகராட்சியில் பொருள் எண் 2-ல் கண்ட பகுதிகளுகடகு ஏற்கனவே குடிநீர் சப்ளை செய்து வரும் திரு.ஜெ.தங்கலிங்கம் என்பவர் மூலம் மன்றத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட விலையில் (ரூ.அறுநூறு மட்டும்) பணி செய்து வர மன்றம் அனுமதி வழங்குகிறது |

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர் பெயர்/முகவரி | ஒப்பந்தவகை |
|---|---|---|---|---|
| | காயல்பட்டணம் நகராட்சி புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள நீர்தேக்க தொட்டியிலிருந்து கீழலட்சுமிபுரம் தர்மராஜபரம் ஹாஸ்டல்ரோடு பகுதிக்கு 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட டிராக்கடர் வாகனம் மூலம் குடிநீர் சப்ளை செய்ய(குடிநீர் விலை, எரிபொருள்,ஓட்டுநர் படி மற்றும் அனைத்து செலவுகள் உட்பட | 0.75 | திருமதி. எப்.முனவரா, காயல்பட்டணம் | மதிப்பீடு ரேட்டைவிட குறைவு |
| | | | திரு.எஸ். பாருக், காயல்பட்டணம் | மதிப்பீடு ரேட்டைவிட குறைவு |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு நகர்மன்ற ஒப்புதல் பெற 27.02.2014 அன்று நடந்த நகர்மன்ற சாதாரணக்கூட்டத்தில் மன்றப்பொருள் வைக்கப்பட்டதில் நகர்மன்றம் தீர்மானம் எண் 780 நாள் 27.02.2014 -ன் படி அப்பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்துள்ளது. எனவே மேற்கண்ட இடங்களில் குடிநீர் தேவையின் அவசியத்தை கருதியும் நாடாளுமன்ற தேர்தல் அறிவிப்பு வருவதை முன்னிட்டும் ஏற்கனவே குடிநீர் சப்ளை செய்து வரும் திரு.ஜே.தங்கலிங்கம் கோமான்புதூர் என்பவர் மூலம் மதிப்பீடு விலை விகிதத்தில் விநியோகம் செய்ய நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை அங்கீகரிக்க நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு மன்றம் அனுமதி வழங்கலாம்

| | | | |
|---|---|---|---|
| | 792 | காயல்பட்டணம் நகராட்சியிவ் மழைநீர் வடிகால் வசதி இல்லாத மக்கள் வசிக்கும் பகுதிகள் மற்றும் சாலைகளில் தேங்கும் மழைநீரால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். பொதுமக்களின் நலன் கருதி பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் மழைநீரை வெளியேற்ற ஏதுவாக 2 ரீ திறன் கொண்ட ஆயில் இஞ்சின் மற்றும் 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட டேங்கர் மற்றும் டிராக்டர் புதியதாக வாங்குவதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.10.00/- இலட்சத்திற்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது<br><br>அலுவலக குறிப்பு மன்றம் அனுமதி வழங்கலாம் | திட்ட நிதி பெற்று பணி செய்யவும் திட்ட நிதி பெறமுடியாத பட்சத்தில் பொது நிதி மூலம் பணி செய்யவும் மன்றம் அனுமதி வழங்குகிறது |
| | 793 | வறட்சி நிவாரணப்பணிகள் 2014-ல் காயல்பட்டணம் நகராட்சிக்கு புதிய நீர் ஆதார அமைப்பினை உருவாக்குதல் அல்லது ஏற்கனவே பழுதடைந்துள்ள நீர் ஆதார அமைப்பினை மேம்படுத்துதல் பணிக்கு ரூ.18.00 இலட்சமும் குடிநீர் விநியோகம் பாதிக்கப்படும் இடங்களில் குடிநீர் டேங்கர் லாரி/டிராக்டர் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய ரூ.11.00 இலட்சமும் ஒதுக்கீடு செய்து நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களிடமிருந்து வரப்பெற்ற கடிதம் ந.க.எண் 4282/2013நு2 நாள் 26.02.2014 மன்றத்தின் பார்வைக்கும் மேற்கண்ட திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைக்கு பணிகள் மேற்கொள்ளவம் நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலக குறிப்பு மன்றம் அனுமதி வழங்கலாம் | தேவைப்படும் பட்சத்தில் வேலை உத்திரவு வழங்க மன்றம் தீர்மானிக்கிறது |
| 05.03.2014 | 794 | மேஜைபொருள்-1<br><br>காயல்பட்டணம் நகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் ரோஜா ஆண்கள் சுயஉதவிக்குழுவை சேர்ந்த 12 துப்புரவு பணியாளர்கள் ஒப்பந்த காலம் 31.03.2014 அன்று நிறைவு பெறுவதால், மேற்படி பணியாளர்களின் ஒப்பந்தத்தினை மேலும் 89 நாட்களுக்கு நீட்டித்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**.அலுவலககுறிப்பு:-**<br><br>மன்றம் அனுமதி வழங்கலாம். | மன்றம் அனுமதி வழங்குகிறது |